சகோதரி.
கலா வின்செண்ட்ராஜ்

# சிறுமையானவர்களை விடுவிக்கிறவர்



பெண்கள் பகுதி

**கூப்பிடுகிற எளியவனையும் உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். சங்கீதம் 72:12**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். இன்றைக்கு பூமி முழுவதும் உள்ள மக்கள் உதவியற்ற நிலையில் யார் எனக்கு இரங்குவார்? யார் எனது திருமண காரியத்தை எடுத்து செய்வார்? இந்த கடனை யார் எனக்கு கொடுத்து தீர்க்க உதவி செய்வார். இந்த குடும்பப்பிரச்சனையை சரி செய்ய யார் வந்து எங்களுக்கு உதவுவார்கள் என்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா?. மற்ற மனிதர்களிடம் பகிர்ந்து கொள்ள முடிந்தவைகளை மற்றவர்களிடம் சொல்லி ஆறுதல் அடைந்தாலும், மற்றவர்களிடம் சொல்ல முடியாத எத்தனையோ துயரங்களை, வருத்தங்களை இருதயத்தில் வைத்து தினம் தினம் கதறிக் கொண்டிருக் கின்றீர்களா?. அப்படிப்பட்ட நம்மைப் பார்த்து தான் சங்கீதக்காரர் சொல்லுகிறார் கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையான வனையும் அவர் விடுவிப்பார் என்கிறார்.

## கர்த்தரை நோக்கிப் பாருங்கள்

**மாற் 16:3,4 வசனங்களில் கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித்தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது; அவர்கள் ஏறிட்டுப் பார்க்கிற போது, அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள்.** இயேசுவைக் கல்லறையில் வைத்து விட்டார்கள். அவருக்கு சுகந்த வர்க்கமிடும்படி சென்ற பெண்கள் கல்லறையில் வைக்கப்பட்டிருக்கிற இந்தக் கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். அந்தக்கல் மிகவும் பெரிதாயிருந்தது அவர்கள் ஏறிட்டுப் பார்க்கிற போது அது தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள். இந்தப் பெண்கள் நமக்காக எவன் இந்தக் கல்லை புரட்டித் தள்ளுவான், எவன் நமக்கு உதவி செய்யப் போகிறான் என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டே நின்று விடவில்லை. அந்தக் கல் மிகவும் பெரிதென்று அவர்களுக்கு தெரிந்திருந்தாலும் அவர்கள் இந்த கல்லை ஏறிட்டுப் பார்க்கிறார்கள். அது ஏற்கனவே தள்ளப் பட்டிருக்கிறதைக் கண்டார்கள்.

இந்த செய்தியை வாசிக்கின்ற அருமையான சகோதரிகளே உங்கள் பிரச்சனை எவ்வளவு பெரிதாயிருந்தாலும், எனக்காக யார் அதை புரட்டித்தள்ளுவான், சரிசெய்வான் என்று நீங்கள் மலைத்து நின்று விடாமல், உங்கள் கண்களை ஏறெடுத்து தேவனை நோக்கிப் பாருங்கள். **எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும் என்று சங் 121:1,2-ல்** சொல்லப்பட்டுள்ள தேவ வார்த்தையின்படி. அவரிடமிருந்து ஒத்தாசை உங்களுக்கு உதவி வரும்,

என்று நம்பிக்கையோடு உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்.

## கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்

**ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம், எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும், உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம், கர்த்தாவே, நீர் எங்கள் தேவன், மனுஷன் உம்மை மேற்கொள்ள விடாதேயும் என்றான். அப்பொழுது கர்த்தர் அந்த எத்தியோப் பியரை ஆசாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறிய அடித்ததினால் எத்தியோப்பியர் ஓடிப் போனார்கள். 2 நாளா 14:11,12**

ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, கர்த்தாவே பலமுள்ள வனுக்காகிலும், பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம். எங்கள் தேவனாகிய கர்த்தாவே துணை நில்லும் என்று ஜெபிக்கிறான். அவனுக்கு விரோதமாய் ஏராளமான கூட்டம் எதிர்த்து வந்தார்கள். ஆனால் இவனிடம் அதையெல்லாம் எதிர்க்கப் போதுமான படைபலம், பெலனில்லை. அவன் கர்த்தரை நோக்கி கூப்பிட்டு கர்த்தாவே கூப்பிடுகிற எளியவனை விடுவிக்கிறவரே, எனக்கு உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம், கர்த்தாவே துணை நில்லும் என்று ஜெபித்தான். கர்த்தர் அவன் ஜெபத்தைக் கேட்டு எதிராய் வந்த அந்த சேனையை, அவர்கள் திரும்ப பலம் கொள்ள முடியாத அளவுக்கு முறிந்து விழுந்து நொறுங்கிப் போகப் பண்ணினார்.உங்கள் வாழ்க்கையிலும் ஏராளமான பிரச்சனைகளை சந்தித்து வருகிறீர்களா? எதை சமாளிப்பேன் எந்த பக்கமும் எனக்கு நிம்மதியில்லை என்று தொய்ந்து போய் விட்டீர்களா? ஆசா ராஜாவைப் போல கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். உதவியற்ற சிறுமையானவனை அவர் விடுவிக்கிறவர். உங்களுக்கு கட்டாயம் பெலன் தந்து, எதிரியை மேற்கொள்ளவும், அவன் திரும்ப எழுந்திருக்க முடியாதபடிக்கு, அவனை முற்றிலும் அழித்து உங்களுக்கு ஜெயத்தையும், பெலத்தையும் தந்து உயர்த்துவார்.

உங்கள் வாழ்க்கையிலும் ஏராளமான பிரச்சனைகளை சந்தித்து வருகிறீர்களா? எதை சமாளிப்பேன் எந்த பக்கமும் எனக்கு நிம்மதியில்லை என்று தொய்ந்து போய் விட்டீர்களா? ஆசா ராஜாவைப் போல கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

## கர்த்தரைப் பணிந்து கொள்ளுங்கள்

**அவள் வந்து ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள். மத் 15:25**

கானானிய பெண் தன் மகள் அசுத்த ஆவியினால் தாக்கப்பட்டு கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லி ஆண்டவரைக் கூப்பிட்டாள். சில நாட்களுக்கு முன்பு ஒரு சகோதரன் தன் வாலிப மகளுக்காக ஜெபிக்க தொலைபேசியில் கேட்டுக் கொண்டார். என் மகளுக்கு வயிற்று வலி அடிக்கடி ஏற்படுகிறது. சில நாளுக்கு முன்பாக கனவில் யாரோ ஒருவர் தன் படுக்கையில் தலைமாட்டில் உட்கார்ந்திருப்பது போல பார்த்து பயந்து விட்டாள். அதிலிருந்து தான் இந்தப் பிரச்சனை அவளுக்காக ஜெபியுங்கள் என்றார். இங்கு இந்த பெண் என் மகளால் ஜெபிக்க முடியவிட்டாலும், என் மகளுக்கு விடுதலை வேண்டும் என்று நான் இயேசுவை நோக்கிக் கூப்பிடுகிறேன் என்றாள். இயேசு உடனடியாக அவளுக்கு பதில் கொடுக்காமலிருந்தாலும் அவள் விடவில்லை. தொடர்ந்து கூப்பிட்டுக் கொண்டே வருகிறாள். இயேசு அவளைப் பார்த்து உன் விசுவாசம் பெரிது நீ விரும்புகிறபடி ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.

இயேசு பிசாசினால் துன்பப்பட்ட யாவரையும் சுகமாக்கி, எங்கும் நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தார். இந்த செய்தியை வாசிக்கின்ற இந்நேரமே உங்கள் வீடுகளுக்குள்ளும் இருக்கிற அசுத்த ஆவிகளின் ஊடுருவல்களை துரத்தி, உங்களுக்குள் ஒரு அற்புதத்தை செய்வார். இயேசுவே இந்த அசுத்த ஆவிகளின் தாக்குதல்களை அழித்துப் போடும் என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு அவரைப் பணிந்து கொள்ளுங்கள்.

## கர்த்தரை விசுவாசியுங்கள்

**உடனே பிள்ளையின் தகப்பன், விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான். மாற்கு 9:24**

> தகப்பன் தன் மகனுக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்று இயேசுவிடம் உதவி செய்ய கேட்கிறான். தன்னுயை அவிசுவாசம் நீங்கும்படி எனக்கும் உதவி செய்யும் என்கிறான். தேவனிடமிருந்து அற்புதங்களை நாம் பெற விசுவாசம் தான் தேவை.

ஒரு தகப்பன் தன் மகனை ஒரு ஊமையான ஆவி பிடித்து தாக்குகிறது. அதனால் அவன் நீரிலும் நெருப்பிலும் விழுகிறான். உம்மால் ஏதாவது செய்யக் கூடுமானால் எங்கள் மேல் மனமிரங்கி எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்றான். இயேசு அவனிடம் நீ விசுவாசிக்க கூடுமானால் ஆகும். விசுவாசிக் கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். அப்போதுதான் அந்த தகப்பன் தன் மகனுக்கு விடுதலை கிடைக்கவேண்டும் என்று இயேசுவிடம் உதவி செய்ய கேட்கிறான். தன்னுடைய அவிசுவாசம் நீங்கும்படி எனக்கும் உதவி செய்யும் என்கிறான். தேவனிடமிருந்து அற்புதங்களை நாம் பெற விசுவாசம் தான் தேவை. பேதுரு கடலில் நடந்து வருகிற இயேசுவை பார்த்ததும் மலையளவு விசுவாசம் அவனுக்கும் வந்தது. நானும் இந்த மாதிரி நடந்து வர எனக்கு கட்டளையிடும். உதவும் என்றான். சற்று நேரத்தில் அவனுக்குள் அவிசுவாசம் எட்டிப்பார்த்ததும் இயேசுவை நம்பி தண்ணீரில் இறங்கிட்டியே உள்ளே போய் விட்டால் என்ன செய்வது என்று நினைத்தான். அப்பவே அவனுக்குள் அவிசுவாசம் மேலோங்கி விட்டதும் உள்ளே அமிழத் தொடங்கினான். திரும்ப இயேசு கைகொடுத்து அவனை தூக்க வேண்டியதாயிற்று. உங்கள் வாழ்விலும், எங்கள் மேல் மனமிரங்கி உதவி செய்ய வேண்டும் என்று உள்ளத்தில் ஏக்கத்தோடு கேட்டுக் கொண்டுதான் இந்த செய்தியை நீங்கள் வாசித்துக் கொண்டிருக் கிறீர்களா?. அதே சமயத்தில் இயேசு இந்த நன்மையை உங்களுக்கு செய்ய அவரை முழுமையாய் நம்புகிறீர்களா? இல்லாவிட்டால் இயேசுவே என் அவிசுவாம் நீங்கும்படி எனக்கு உதவி செய்யும் என்று ஆண்டவரிடம் கேளுங்கள். அந்த தகப்பன் தன் பிள்ளைக்காக ஆண்டவரிடம் கேட்க வெட்கப் படவில்லை. தன்னிடம் உள்ள குறையை மறைத்து கொண்டிருக்கவில்லை. வெளிப்படையாய் ஆண்வரிடம் சொல்லி அவர் உதவியை நாடினான், உதவியற்ற உங்களையும் அவர் விடுவிப்பார். ஆண்டவராகிய தேவன் தாமே கூப்பிடுகிற எளியவர்களாகிய உங்களையும், உதவியற்ற சிறுமையான வர்களையும் அவர் விடுவித்து உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பாராக!

24 மணி நேர
ஜெப உதவிக்கு
94428 00449
94428 00447
94980 00449
TOLL FREE NUMBER
1800 309 9333